**அசல் வழக்கு எண். 266/2019 தேதி-23.07.2025**

**பி.வா.சா. 2- தங்கராசு**

**<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் இடையப்பட்டியில் வசித்து வருகிறேன். எனது நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் நான் சொல்லி எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். நான் விவசாயம் செய்து வருகிறேன். கடவூருக்கும் இடையப்பட்டிக்கும் எவ்வளவு தொலைவு இருக்கும் என்றால் சுமார் 3 கீ.மீ தொலைவு இருக்கும். மைனர் வாதியின் தாயாரை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். சண்முகவள்ளியின் மகன் பெயர் என்ன என்றால் மணிகண்டன். சாட்சி மீண்டும் மணி என்று கூறுகிறார். இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் எனக்கு உறவுகள் என்றால் சரியல்ல.

2. அவர்கள் எனக்கு சொந்தம் இல்லை. எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 மகள்களும் மற்றும் 1 மகனும் உள்ளனர். யார் மூத்தவர் என்றால் என் மகள் கோதாவரி தான் மூத்த மகள் ஆவார். 2 வது மகள் மகாலெட்சுமி, எனது மகன் பெயர் கோபி கிருஷ்ணன் ஆகும். 2 ம் பிரதிவாதி ஜோதிமணியின் மைத்துனன் பெயர் என்ன என்றால் தெரியாது. அவருக்கு தான் எனது 2 வது மகளை திருமணம் செய்து வைத்துள்ளேன் என்றால் சரிதான். எனது மறுமகனின் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 1 முதல் 3 பிரதிவாதிகள் எனக்கு உறவுக்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாகவும், வாதிக்கு எதிராகவும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் படித்துள்ளேனா என்றால் படிக்கவில்லை. வா.சா.ஆ.5 ஆவணத்தில் மணிவேல் என்பவரின் தந்தை நாகராஜன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிக்கும் சொக்கன் (எ) சொக்கலிங்கத்திற்கும் திருமணம் செய்து கொண்டனர் என்றால் சரிதான். மேற்படி சொக்கனின் மனைவி தான் மைனர் வாதியின் தாயார் சண்முகவள்ளி ஆவார்.

3. மைனர் வாதி மணி எப்போது பிறந்தார் என்றால் தேதி சரியாக நினைவில்லை. மைனர் வாதி நாகராஜன் என்பவரின் மகன் என்றும், பிரதிவாதிகள் எனக்கு உறவினர்கள் என்பதால் வாதிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. மேற்படி சண்முகவள்ளிக்கும் சொக்கன் என்பவருக்கும் திருமணம் நடைபெறவில்லை என்றும், அவர்கள் கணவன் மனைவி இல்லை என்றால் சரியல்ல. மேற்படி இருவரும் ஒரே வீட்டில் தான் வசித்து வந்தார்கள். சண்முகவள்ளியின் கணவர் தான் சொக்கலிங்கம் ஆவார். வழக்கு தாக்கல் செய்த பிறகு நானும், ஜோதிமணி ஆகியோர் சண்முகவள்ளியிடம் பஞ்சாயத்து பேச சென்றோமா என்றால் என்னை பஞ்சாயத்து பேச அழைத்தார்கள்.

4. என்னை பஞ்சாயத்துக்கு அழைத்தது யார் என்றால் அரண்மனையில் ஜமீன்தார் அழைத்தார். நானும் சென்றேன். ஆனால் சண்முகவள்ளி அங்கு வரவில்லை. சண்முகவள்ளி தனியாக இருப்பதால் ஆட்கள் வைத்து நாங்கள் மிரட்டினோம் என்பதால் அவர் பஞ்சாயத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. நாகராஜன் எப்போது இறந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு பற்றி எனக்கு தெரியாது என்றும், பிரதிவாதிகள் அழைத்ததின் பேரில் அவர்களுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

**எனவே பி.சா.2 ன் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.**

Taken down by me in the open court read over interpreted to the witness and acknowledged by him /her to be correct

Sd/-A.யுகாதிமரியா

**Additional District Munsif,**
**Kulithalai.**